மே 2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of May 2022)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009.

கடித.எண். 12002 / பக5(1)/ 2022-1, நாள்.17.05.2022

அனுப்புநர்
திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /
சார் கருவூல அலுவலர்கள். (இணைப்பு)
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை – 01 / 08 / 35. (இணைப்பு)
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள். (இணைப்பு)

ஐயா/அம்மையீர்,

பொருள்: பள்ளிக் கல்வி – அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட 18 மாதிரிப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 306 ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 126 ஆசிரியரல்லாத பணியிடங்கள் மற்றும் 2013-14 மற்றும் 2014-15-ஆம் கல்வியாண்டுகளில் நிலையுயர்த்தப்பட்ட 100 (50+50) உயர்நிலைப் பள்ளிகளுக்கு தோற்றுவிக்கப்பட்ட 700 (350+350) ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 1132 பணியிடங்களுக்க மே-2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்க ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல் – குறித்து.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.321, பள்ளிக் கல்வித் துறை, நாள் 22.10.2010.
2. அரசாணை (நிலை) எண்.185, பள்ளிக் கல்வித் துறை, நாள் 17.9.2013.
3. அரசாணை (நிலை) எண்.199, பள்ளிக் கல்வித் துறை, நாள் 2.12.2014.
4. அரசாணை (1டி) எண்.408, பள்ளிக் கல்வி [பக5(1)]த் துறை, நாள் 25.10.2019.
5. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க .எண். 00520 / எல்/ இ3/2022, நாள் 11.05.2022.

------

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட 18 மாதிரிப் பள்ளிகளுக்கு, ஒவ்வொரு பள்ளிக்கும் 17 ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 7 ஆசிரியரல்லாத பணியிடங்கள் வீதம் முறையே 306 ஆசிரியர் பணியிடங்களும், 126 ஆசிரியரல்லாத பணியிடங்கள் என மொத்தம் 432 பணியிடங்கள் தோற்றுவித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், 2013-14 ஆம் கல்வியாண்டில் 50 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும், தரம் உயர்த்தப்படும் 50 உயர்நிலைப்பள்ளிகளுக்கு தலா 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தும், தரம் உயர்த்தப்படும் 50 நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தியும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், 50 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிகளை, உயர் நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும்போது நடுநிலைப்பள்ளிகளில் ஏற்கனவே செயல்பட்டு வரும் 1 முதல் 5 வகுப்புகள் தொடக்கப்பள்ளிகளாக நிலையிறக்கம் செய்யப்படுவதால், அப்பள்ளிகளுக்கு தலா ஒரு தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 50 தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள் தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. பார்வை மூன்றில் காணும் அரசாணையில், 2014-15 ஆம் கல்வியாண்டில் 50 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியும், இவ்வாறு நிலை உயர்த்தப்படும் 50 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பணியிடங்களை, அரசு உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாக ரூ.9300-34800+4800 என்ற தர ஊதியத்தில் நிலை உயர்த்தியும், நிலை உயர்த்தப்படும் பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு தலா 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 250 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ரூ.9300-34800+4600 என்ற தர ஊதியத்தில் புதியதாக தோற்றுவித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும், இவ்வாறு தரம் உயர்த்தப்படும் 50 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி நடுநிலைப்பள்ளிகளில் ஏற்கனவே செயல்பட்டு வரும் 1 முதல் 5 வகுப்புகள் தொடக்கப்பள்ளிகளாக நிலையிறக்கம் செய்யப்படுவதால், அப்பள்ளிகளுக்கு தலா ஒரு தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 50 தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் பணியிடங்கள் ரூ.9300-34800-4500 என்ற தர ஊதியத்தில் தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே பார்வை 1 முதல் 3 வரை காணும் அரசாணைகளின்படி தோற்றுவிக்கப்பட்ட 1132 தற்காலிகப் பணியிடங்களுக்கு கடைசியாக பார்வை நான்கில் காணும் அரசாணையின்படி, 01.01.2019 முதல் 31.12.2021 வரை தொடர் நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

5. மேற்காணும் 1132 தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2022 முதல் 31.12.2022 வரை மேலும் ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்கக் கோரி பள்ளிக் கல்வி ஆணையர் அரசிற்கு கருத்துரு அனுப்பியுள்ளார். மேலும், தற்பொழுது, இப்பணியிடங்களுக்கு மே-2022-ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் ஊதியம் வழங்க ஊதிய கொடுப்பாணையினை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

6. மேற்குறிப்பிட்டுள்ள தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2022 முதல் 31.12.2022 வரை ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி ஆணையரின் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்நிலையில், இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ள 1132 ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத தற்காலிகப் பணியிடங்களுக்கு மே-2022-ஆம் மாதத்திற்கான ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான மே-2022-ஆம் மாதத்திற்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

17/5/22

(அரசு சார்புச் செயலாளர்)

அரசு முதன்மைச் செயலாளருக்காக

17.5.22

4/6

**நகல்**

✓ பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6 (இணைப்பு)
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35. (இணைப்பு)
நிதி(கல்வி-II);த் துறை , சென்னை-9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

இவ் அலுவலக ந.க.எண். 00520/எல்/இ3/2022 நாள்: 19.5.2022

நகல்) தகவலுக்காகவும், தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர்

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

19.5.22

இணை இயக்குநர் (நா.ந.தி.),
பள்ளிக் கல்வி ஆணையரகம்,
சென்னை-600 006.

19/5/2022